## 5.8 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 2001 – 2002 ஆண்டுக்கு நீட்டித்தல்

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந.3) துறை

அரசாணை (நிலை) எண்153 நாள் : 24.10.2001

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண் 292 சந(ம) சதி துறை நாள் 04.12.96
2. அரசு ஆணை நிலை எண் 329 சந (ம) சதி துறை நாள் 17.11.97
3. அரசு ஆணை நிலை எண் 239 சந (ம) சதி துறை நாள் 05.10.98
4. அரசு ஆணை நிலை எண் 176 சந (ம) சதி துறை நாள் 29.9.99
5. அரசு ஆணை நிலை எண் 129 சந(ம) சதி துறை நாள் 04.08.2000

மேலும் படிக்க :

6. தலைவி (ம) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் கடிதம் எண் 2488/இ1/2001 நாள் 21.5.2001, 8.8.2001 மற்றும் 20.09.2001

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் தமிழ்நாட்டில் ரூ.1440 கோடி செலவில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு திட்டத்தை (பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்) செயல்படுத்தவும் முதல் கட்டமாக ரூ.2.40 கோடி செலவில் 14 மாவட்டங்களில் 1996–97 ஆம் ஆண்டில் செயல்படுத்திடவும் ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வையிரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட திட்டம் ரூ.11.594 கோடி செலவில் 1997–98ம் நிதியாண்டில் நீட்டிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 7 மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை ரூ.12 கோடி செலவில் 1998–99 ம் ஆண்டிற்கு நீட்டித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. பார்வை நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் (சென்னை நீங்கலாக) 28 மாவட்டங்களிலும் திட்டத்தை ரூ.12 கோடி செலவில் 1999–2000ம் நிதியாண்டில் நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டது. பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.12 கோடி செலவில் 2000–2001ம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது.

2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர் படிக்கப்பட்ட கடிதங்களில் 2001–2002ம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்தை 30 மாவட்டங்களிலும் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.22 கோடி செலவில் தொடர்ந்து செயல்படுத்துவது சிரமமாக இருக்கும் எனவும் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.32.67 கோடி ஒதுக்கீடு செய்யுமாறு வேண்டியுள்ளார்.

3. மேற்படி கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்து 2001–2002 நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.22 கோடியை (ரூபாய் இருபத்திரண்டு கோடி மட்டும்) பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்திட ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் வெளியிடப்பட்ட ஆணை கீழ்க்கண்ட நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயல்படுத்திட வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

(1) 2001–2002ம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூ.22 கோடி (ரூபாய் இருபத்திரண்டு கோடி மட்டும்) காலாண்டு அடிப்படையில் ஒவ்வொரு காலாண்டிற்கும் விடுவிக்கப்படும். இத்தொகை தொடர்புடைய தன் வைப்பு நிதியில் (PD Account) வரவு வைக்கப்படும்.

(2) தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் பொது வைப்பு நிதியில் உள்ள தொகையில் தேவைப்படும் தொகையை விடுவிக்கக்கோரி ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசின் நிதித்துறையை வழிவகைகள் (Ways and Means) அணுக வேண்டும்.

(3) தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் தன் வைப்பு நிதியிலிருந்து (PD Account) தொகை விடுவிக்க வேண்டும்போது நிதித்துறை (வழிவகைகள் (Ways and Means) செலவினத்தின் நிலைக்கேற்ப தொகையை விடுவிக்கும்.

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.22 கோடியை (ரூபாய் இருபத்திரண்டு கோடி மட்டும்) பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் / நிபந்தனைகளின் அடிப்படையில், தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர்,

## 5. MAHALIR THITTAM

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு காலாண்டு அடிப்படையில் பெற்று வழங்கிட சமூக நல ஆணையர், சென்னை–5 கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

2235 சமூகப்பாதுகாப்பும் நலனும் – 02. சமூக நலன் – 103 மகளிர் நலன் – ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – LC – தமிழ்நாடு மகளிர் முன்னேற்ற திட்டம் (மகளிர் திட்டம்) – II உதவித் தொகைகள் 02 பொதுவான உதவித் தொகை (து.தொ.கு.2235 02 103 LC 1123)

7. மேற்கண்ட தொகை பணமாக வழங்கப்படக் கூடாது. இத்தொகை கீழ்க்கண்ட தன் வைப்பு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

`K` வைப்புத் தொகைகளும் மற்றும் முன் பணங்களும் (a) வட்டியில்லாத வைப்புத் தொகைகள் 8443.00 – பொது வைப்புத் தொகைகள் 800 ஏனைய வைப்புத் தொகைகள் AE அரசு நிறுவனங்கள் கழகங்கள் ஏனையவற்றின் வைப்புத் தொகைகள் 28 தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன கழக வைப்புத் தொகை (து.தொ.கு. 8443 00 800 AE 280D)

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 219/கூசெ(KSG)/சந/01 நாள் 06.10.2001–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஷீலா பாலாகிருஷ்ணன்**
அரசு செயலாளர்